Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM
DATE: 05.06.2026

Case No : Crl.M.P.No.467/2026
Deposition of Witness : Witness No.4

| | |
|---|---|
| Name இன்பரசன் | Father/Husband Name : லிங்கதுரை |
| Age : 30 | Village : சாலைப்புதூர் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 05.06.2026

<u>மனுதாரர் தரப்பில் 4 ஆவது சாட்சியின் முதல் விசாரணை :-</u>

1. நான் தற்போது சாலைப்புதூரில் குடியிருந்து, ரெட்டியார்பட்டியில் ஐயப்பன் டிரேடர்ஸ் என்ற பெயரில் கட்டுமான பணிகளுக்கு தேவைப்படும் கம்பிகள் கடை வைத்து விபாயாரம் செய்து வருகிறேன். ம.சா.1 என்னுடைய அப்பா ஆவார். ம.சா.2 வசந்த் என்னுடைய தம்பி, ம.சா.3 என்னுடைய அண்ணன் ஆவார்கள். எதிரிகளை தெரியும், என்னுடைய உறவினர்கள் ஆவார்கள்.

2. என்னுடைய சொந்த ஊர் சாலைப்புதூர் ஆகும். என்னுடைய சொந்த ஊரில் சொந்த வீடு உள்ளது. அந்த வீடு மற்றும் அதனை சுற்றியுள்ள கட்டிங்கள் என்னுடைய அப்பாவின் சுயசம்பாத்தியத்தின் மூலம் கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆகும். தற்போது வரை நாங்கள் ஊருக்கு வரும்போது அந்த வீடு மற்றும் அதனை சுற்றியுள்ள கட்டிங்களை பராமரித்து வருகிறோம்.

3. 21.10.2024 அன்று காலையில் பராமரிப்புக்கு தேவையான அனைத்து சமான்களையும் வாங்கிவிட்டு கொத்தனாரின் மேற்பார்வையில் பராமரிப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. மதியம் சுமார் 1 மணியளவில் வெள்ளை நிற மகேந்திரா காரில் 1 ஆவது எதிரி என்னுடைய பெரியப்பா செல்வராஜ் மற்றும் 2 ஆவது எதிரி தெய்வக்கனி, 3 ஆவது எதிரி ம.சா.1 ன் மருமகன் சுவிவர்னன், 4 ஆவது எதிரி ம.சா.1 ன் மகன் இளவரசன் ஆகியோர்கள் வந்து, உங்க அப்பாவுக்கு இங்கு இடம் கிடையாது, ஒரு முறை சொன்னால் உனக்கு தெரியாதா, என்னுடைய செல்வாக்கை வைத்து பொய் வழக்கு போட்டு உன்னை உள்ளே தள்ளிவிடுவேன் என்று கூறி அங்கு கிடந்த கம்பு, கட்டை, கற்கள் ஆகியவற்றைக் கொண்டு என்னையும், எனது தம்பி இன்பரசன் மற்றும் வசந்த் ஆகியோர்களை 3 ஆவது எதிரி சுவீந்திரன் மற்றும் 4 ஆவது எதிரி இளவரசன் ஆகியோர்கள் தாக்கினார்கள். 1 ஆவது எதிரி அவர்களை தூண்டிவிட்டார். அவர்கள் தாக்குவதைப் பார்த்ததும் எங்கள் அருகில் இருந்து கொத்தனார் பால்குட்டி, கையாள் திவாகர் மற்றும் அங்காள ஈஸ்வர் ஆகியோர்கள்சற்று விலகி நின்றனர். இனிமேல் பராமரிப்பு பணி செய்ய இங்கே வந்தால், எனக்கு இருக்கிற பண செல்வாக்கை வைத்து பெரிய கூலிப்படையை வைத்து உங்கள் அனைவரையும் வெட்டி கொன்று புதைத்துவிடுவேன் என்று 1 ஆவது எதிரி கொலைமிரட்டல் விடுத்தார். பின்பு நாங்கள் மேலப்பாளையத்திற்கு சென்றுவிட்டோம். அப்போது மணி மதியம் சுமார் 01.30 இருக்கும். எனவே

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 17:54:50 +0530

எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 17:54:57 +0530

Judicial Magistrate, Sathankulam.